இணைப்பு-V

(55 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 60

பல்வகை மூலதனச் செலவு

கொள்கை விளக்கக் குறிப்பு 2001-2002

இந்த மானியக் கோரிக்கையில், காவல் துறை, எழுது பொருள்-அச்சுத் துறை, மருத்துவம்-பொதுச் சுகாதாரம், மக்கள் நல்வாழ்வு, குடிநீர் வழங்கல், துப்புரவு, வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி, செய்தி, ஆதிதிராவிடர்/பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்டோர் நலன், சத்துணவு, சமூகப் பணிகள், மீனளம், உணவு தானியங்கள் சேமிப்பு மற்றும் கிடங்கு வசதி, கூட்டுறவு, ஊரக வளர்ச்சித் திட்டங்கள், மலைப் பகுதி மேம்பாடு, வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் மின்சக்தித் திட்டங்கள் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகள் குறித்த மூலதனச் செலவு இடம் பெறுகிறது.

இந்த மானியக் கோரிக்கையில் இடம்பெற்றுள்ள முக்கியமான நிதி ஒதுக்கங்களில் சிலவற்றை இக்குறிப்பு புலப்படுத்துகிறது.

முக்கியமான பெருந்தலைப்புவாரியான நிதியொதுக்கங்களின் விவரம் வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

	கணக்குத் தலைப்பு	2000-2001 திருத்த மதிப்பீடு	2001-2002 இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு	2001-2002 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
	(1)	(2)	(3)	(4)
4055.	காவல் துறை குறித்த மூலதனச் செலவு	7344.67	16863.01	9798.43
4215.	குடிநீர் வழங்கல், துப்புரவு குறித்த மூலதனச் செலவு	48986.78	44205.00	53491.02

2001 செப்டம்பர் 13]

4216.	வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு	3363.98	2408.45	3982.45
4217.	நகர்ப்பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு	4015.07	6909.39	6909.39
4225.	ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்த மூலதனச் செலவு	2373.12	2001.21	4715.94
4425.	கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு	(-)394.89	87.26	107.26
4515.	ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு	21633.60	5625.01	5625.01
4551.	மலைப்பகுதிகள் குறித்த மூலதனச் செலவு	287.27	0.02	224.48
4711.	வெள்ளக் கட்டுப்பாடுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு	804.95	2674.05	2957.05
4801.	மின்சக்தித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு	(-)21943.00	10000.00	10000.00

காவல் துறை

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம், பல்வேறு நிதியுதவி நிறுவனங்களின் கடன் உதவியைக் கொண்டு காவல் துறை பணியாளர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டும் பணியை மேற்கொண்டு வருகிறது. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக ரூபாய் 80.81 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. காவல் படையை நவீனப்படுத்துவதற்கான மத்திய அரசு திட்டத்தின்கீழ் ரூபாய் 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. காவல் துறை நிருவாகத்தின் தரத்தை உயர்த்துவதற்காக, பதினோராம் நிதிக்குழு மானியமாக ரூபாய் 7.07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கல் - துப்புரவு

குறைந்தளவு தேவைகள் திட்டத்தின்கீழ் (Minimum Needs Programme) குடிநீர் வழங்கு திட்டத்திற்கு ரூபாய் 411 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு நிதியுதவியைக் கொண்டு ஒகேனக்கல் மற்றும்

இராமநாதபுரத்தில் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக ரூபாய் 10 கோடி அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக, நகர்ப் பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு மூலதன மானியமாக ரூபாய் 71.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நகர்ப் பகுதிகளில் மகளிருக்குக் கழிப்பிடத் தொகுதிகள் கட்டும் புதிய திட்டத்திற்கு ரூபாய் 42.41 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

வீட்டு வசதி

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்று, அரசுப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிவருகிறது. இக்கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக, ரூபாய் 27.18 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஹட்கோ நிறுவனத்தின் உதவி பெறும் சென்னை வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ், குடிசைப் பகுதி மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக ரூபாய் 11.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நகர்ப்பகுதி வளர்ச்சி

தமிழ்நாடு நகர்ப் பகுதி வளர்ச்சி நிதியுதவி நிறுவனம் செயற்படுத்தும் 'மகா நகர்' திட்டத்திற்கு ரூபாய் 17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் பன்னாட்டுக் குழு அடிப்படை வசதி குத்தகை மற்றும் நிதியுதவிப் பணிகள் நிறுவனத்துடன் (ILFSL) சேர்ந்து ஏற்படுத்தியுள்ள "இந்திய செக்டோரல் பங்கு நிறுவனத்தில்" பங்குத் தொகைக்காக ரூபாய் 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஹட்கோ நிறுவனத்தின் நிதியுதவியுடன் சென்னையில் ஆரச் சாலைகள் அமைக்கும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. இதே போன்று, 'ஹட்கோ' மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள் வளர்ச்சி நிதியுதவி நிறுவனத்தின் உதவியுடன் பரங்கிமலை-பூவிருந்தவல்லி சாலையை மேம்படுத்தும் பணியையும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயற்படுத்தி வருகிறது. இக்கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக ரூபாய் 42.09 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நலன்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மாணவர் இல்லங்கள் மற்றும் பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகள் கட்ட ரூபாய் 1.08 கோடியும், ஆதிதிராவிடர் நலப் பள்ளிக்கு கட்டடங்கள் கட்ட ரூபாய் 2.15 கோடியும், ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர் இல்லக் கட்டடங்களுக்காக ரூபாய் 26.75 கோடியும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டு

2001 செப்டம்பர் 13]

நிறுவனத்திற்கு பங்கு மூலதனவகையில் ரூபாய் 3.32 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மீனளம்

மீன்களைக் கரை இறக்குவதற்கான வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபாய் 4.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபாய் 2.42 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் திட்டங்கள்

ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ், ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமாக ரூபாய் 56.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மலைப்பகுதிகள்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், உள்ளாட்சி மன்றங்களை மேம்படுத்தவும், குடிநீர் வழங்கல், வடிகால் மற்றும் சாலைகளை மேம்படுத்தவும் ரூபாய் 1.97 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

வெள்ளக் கட்டுப்பாடு

வடசென்னையில் கடற்கரை நெடுக கூழாங்கற்களைக் கொண்டு தடுப்புச் சுவர் கட்டுவதற்காக 2001-2002 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 5.43 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஹட்கோ நிறுவன உதவி பெறும் சென்னை வெள்ள நிவாரணப் பணித் திட்டத்தின் கீழ் வெள்ளக் கட்டுப்பாட்டுப் பணிகளுக்காக ரூபாய் 23.44 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மின் சக்தி

தமிழ்நாடு மின் வாரியத்திற்கு பங்கு மூலதன உதவித் தொகையாக ரூபாய் 100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.